மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியை நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் அடிப்படையில் 11—9—1980-ல் இதுபோன்ற அங்காடிகளில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு நிரந்தரமான ஒரு ஊதியம் கட்டாயமாக, அதாவது ஒரு குறைந்தபட்ச ஊதியம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் ரூ. 150-வரை கிடைக்கவேண்டும் என்று ஒரு நடைமுறையை அரசுக்கு தெரிவித்து உத்தரவு இட்டிருக்கிறார்கள். அதை நடைமுறைப் படுத்த, இந்தச் சீர்திருத்தத் திட்டங்களை அரசாங்கம் இப்போது நடை முறைப்படுத்த இருக்கிறது. மாலை அதிக நேரம் கடைகளைத் திறந்து வைத்திருக்க அரசாங்கம் இப்போது நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

பெருந்துறையிலுள்ள இரண்டாம் வகுப்பு நீதிமன்றத்தின் நீதிபதி பதவி

*** வினா எண் 893.—திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையில் உள்ள 2 ஆம் வகுப்பு நீதி மன்றத்தின் நீதிபதி பதவி இன்னும் நிரப்பப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) கால தாமதத்திற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) 1—4—1981-ல் இருந்து நீதிபதி பதவியில் உள்ளார்.

திரு. தி. கா. நல்லப்பன் : இந்தக் கேள்வி கேட்கப்பட்டு ஏறக்குறைய மூன்று மாதங்கள் ஆகின்றன. மூன்று மாதங்களுக்குப் பின்னால் இது வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல விடை கிடைத்திருக்கிறதே.

திரு. தி. கா. நல்லப்பன் : அங்கிருந்து நீதிபதி மாற்றப்பட்டு ஏறக்குறைய நான்கு ஐந்து மாதங்களாகிவிட்ட காரணத்தால் பல்வேறு வழக்குகள் இருப்பிலே இருக்கின்றன. ஆகவே ஒரு நீதிபதியை மாற்றி இன்னொரு நீதிபதியை நியமனம் செய்வதற்கு இவ்வளவு காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் இதுபற்றிக் கூறி, மனு மூலமாக எழுதித்தந்து, அந்த மனுவை அவர்களிடம் இருந்து நான் பெற்று என்னுடைய கையாலேயே அதில் என்டோர்ஸ்மெண்ட்டும் செய்து உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பியது அவர் களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, பல நீதிமன்றங்களில்கூட தற்போது

1981 ஏப்ரல் 27]

நீதிபதி ஒருவர் விடுப்பில் சென்றால் மாற்றுவசதியில்லாமல்—நீதிபதிகள் தேர்வு நடந்து கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறது. தற்போது உயர்நீதி மன்றத்திற்கு கீழேயுள்ள டிஸ்ட்ரிக்ட் முன்சீப் தேர்வு நடத்தப்பட்டிருக்கிறது. விரைவில் அந்த இடங்கள் எல்லாம் நிரப்பப்படும். அப்போது இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும்.

திருத்தணியில் நீதிமன்றங்களுக்கான கட்டிடம் கட்டும் திட்டம்.

* வினா எண் 894.—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் திருத்தணியில் உள்ள மாவட்ட முன்சீப், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் ஆகிய இரு நீதிமன்றங்களுக்கும் நிரந்தர கட்டிடம் கட்ட அரசின் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் கட்டிடம் கட்ட எப்போது பணி துவங்கும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. கோபால் : அமைச்சர் அவர்கள் விடையளிக்கும்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதாகக் கூறினார்கள். திருத்தணியில் உள்ள மாவட்ட முன்சிப், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் ஆகிய நீதிமன்றங்களுக்கு புதிதாக ஒரு கட்டடம் கட்டித்தரவேண்டும் என்று பொதுமக்களிடமிருந்தும் வழக்கறிஞர்களிடமிருந்தும் பத்தாண்டுகளாகவே கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அவர்கள் நலன் கருதி அங்கே அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதன் தேவை மிகவும் இன்றியமையாத ஒன்று என்பதை அரசாங்கம் உணர்ந்து ஏற்றுக்கொண்ட காரணத்தால்தான் உயர்நீதிமன்றத்தினிடம் அதுகுறித்து ஒரு அறிக்கை கேட்டு அறிக்கையும் பெற்றிருக்கிறது. ஆனால் தகுதியான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று அந்த இடத்தை தேர்ந்தெடுக்கும் பணி பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்த இடம் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதை விரைவுபடுத்தி புதிய இடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கான எஸ்டிமேட்ஸ் தரும்படி உயர்நீதி மன்றமும், பி.டப்ளியூ.டி.-யும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன, அது வந்தவுடன் இது நடைமுறைப்படுத்தப்படும்.